
ஆரம்ப
வாசகர்களுக்கு
பரமசத்தியத்தில்
பரவசம்
ஆகஸ்ட்
2026
Chris
Oyakhilome
Say Yes! TO KIDS CAMPAIGN


ஆரம்ப
வாசகர்களுக்கு
பரமசத்தியத்தில்
பரவசம்

# ஐஎஸ்எஸ்என் 1596-6984
# ஆகஸ்ட் 2026

அனைத்து உரிமைகளும் சர்வதேச பதிப்புரிமை சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டவை.

லவ் வேர்ல்ட் பதிப்பகத்தின் உத்தரவு இல்லாமல் பொருளடக்கம் மற்றும் அட்டையை மொத்தமாகவோ ஒரு பகுதியையோ மறு ஆக்கம் செய்ய கூடாது.
வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத வசனங்களும் மற்ற ஊக்கமான அம்சங்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

**யுனைடெட் கிங்டம்:**
Unit C2, Thames View Business
Centre, Barlow Way Rainham
Essex, RM13 8BT.
Tel.: +44 (0)1708 556 604
+44 (0) 8001 310 604

**யு எஸ் ஏ:**
Loveworld Publishing USA,
28, Prestige Circle,
Suite 1100,
Allen TX 75002.
Tel.: +1 (469) 656-1284
+1 (800) 620-8522

**கன்னடா:**
4101 Steeles Ave. West.
Suite 204 Toronto, Ontario
Canada M3N 1V7.
Tel.: +1 416 667 9191

**தெற்கு ஆப்ரிகா:**
303 Pretoria Avenue
Cnr. Harley and Braam
Fischer,
Randburg, Gauteng 2194
South Africa.
Tel.: +27 11 326 0971

**நைஜீரியா:**
Plot 105, Chris Oyakhilome Crescent, Durumi,
Abuja, Nigeria.

22/23 Billingsway Road,
Oregun, Ikeja, Lagos.
P.O. Box 13563 Ikeja, Lagos.
Tel.: +234 201 8888186
+234 201 3300 102

**மற்ற மொழிபெயர்ப்புகளுக்கான குறிப்புகள்**
EVR-TA - படிக்க சுலபமான பதிப்பு-தமிழ்
GW - தேவனின் வார்த்தை
CEV - தற்கால ஆங்கில பதிப்பு
TLB - ஜீவிக்கும் வேதாகமம்
NLT - புதிய வாழ்க்கை மொழிபெயற்பு

***இணையதளம்:***
***www.kiddiesloveworld.com***

***மின்னஞ்சல்:***
***info@kiddiesloveworld.com***

***பதிப்புரிமை © 2025 லவ் வேர்ல்ட் பதிப்பகம்***







# உள்ளடக்கங்கள்


தியானங்கள்
பக்கங்கள் 6-17

வேதாகமம் உண்மைகள்
பக்கங்கள் 18-19

தியானங்கள்
பக்கங்கள் 20-31

போட்டிகளும் விளையாட்டுகளும்
பக்கங்கள் 32-33

தியானங்கள்
பக்கங்கள் 34-40

போட்டிகளும் விளையாட்டுகளும்
பக்கங்கள் 41

சிறு குறிப்புகள்
பக்கங்கள் 42-43

பதில்கள்
பக்கங்கள் 44-46

இரட்சிப்பின் ஜெபம்
பக்கம் 48



வயது:

பெயர்:

# ஜூலை

## மாதத்திற்க்கு வரவேற்கிறோம்!



ஹலோ! உங்களின் பிரியமான தியானம், **ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசத்துடன்** இந்த அற்புதமான மாதத்திற்கு வரவேற்கிறோம்! இதில் உள்ள ஊக்கமளிக்கும் செய்திகளுடன் நீங்கள் அருமையான நேரத்தைக் கழித்து வருகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த இதழில், நீங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர், தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது, தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளுங்கள், தேவனுடைய சத்தியத்திலே நடவுங்கள், வார்த்தையினால் பிறந்தவர்கள் போன்ற சுவாரஸ்யமான தியானங்கள் நிறைந்துள்ளன.

இன்னும் என்ன? உங்களுக்காக மகிழ்ச்சி நிறைந்த உற்சாகமான விளையாட்டுகளும் புதிர்களும்உள்ளன." ***சுவிசேஷப் பகிர்வு பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை- பகுதி 2*** என்ற ஒரு சிறப்பு துணிக்கை செய்தி உள்ளது.ஊக்கமளித்தும் தினசரிந்தான மா மாதத்தின் உங்கள் ஆரம்ப ஊக்கமளிக்கும் தினசரி தியானமான ***வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசத்தில்*** உள்ளன. ஒவ்வொரு தியானத்தின் முடிவிலும் உள்ள அறிக்கைகள் மற்றும் ஜெபங்களைச் செய்வதை நினைவில் கொள்ளுங்கள்.தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இன்னும் பல சுவாரசியமான குழந்தைகள் நிகழ்ச்சிகளைக் காண ஸ்கேன் செய்யுங்கள்.

சனி 1

# நீங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்

## யோவான் 1:6

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான்.



நீங்கள் அவருக்காக பிரகாசிக்கும்படி தேவன் உங்களை அனுப்பியுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்களா? இயேசுவைப் பற்றி மக்களுக்குச் சொல்வதற்காக தேவனால் அனுப்பப்பட்ட யோவான் என்ற மனிதனைப் பற்றி பைபிள் நமக்குக் கூறுகிறது. அதே வழியில், தேவன் உங்களையும் அனுப்பியுள்ளார்.

நீங்கள் தற்செயலாக இந்த பூமியில் இருக்கவில்லை. நீங்கள் தேவனுடைய பிள்ளை, உங்கள் வாழ்க்கைக்கு ஒரு சிறப்பு நோக்கம் உள்ளது. இயேசு, "பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறினார் (யோவான் 20:21).

இதன் பொருள் நீங்கள் மற்றவர்கள் அவரைப் பற்றி அறிந்துகொள்ள உதவ முடியும். நீங்கள் அன்பாகப் பேசும்போது, ஜெபிக்கும்போது மற்றும் உங்கள் நண்பர்களிடம் இயேசுவைப் பற்றிச் சொல்லும்போது, நீங்கள் அவருக்காக ஒரு சாட்சியாக இருக்கிறீர்கள்.

தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். தேவன் தம்முடைய ஒளியைப் பிரகாசிப்பதற்கும், மற்றவர்கள் அவரைப் பின்பற்றுவதற்கு உதவுவதற்கும் உங்களை அனுப்பியுள்ளார்.

**வேத வாசிப்பு – அப்போஸ்தலர் 5:29-32**

**ஜெபம் செய்வோம்**

அன்புள்ள பரலோக பிதாவே, உம்முடைய ஒளியைப் பிரகாசிப்பதற்காக என்னை அனுப்பியதற்கு நன்றி. மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்வதிலும், அவர்கள் உம்மை அறிந்து உம்மைப் பின்பற்றுவதற்கு உதவுவதிலும் நான் தைரியமாகவும் திறம்படவும் செயல்படுகிறேன் என்று இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்கிறேன். ஆமென்.

ஞாயிறு

2

# தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் கிரியை செய்கிறது

## கொலோசெயர் 1:27

... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.



நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறும்போது, அவருடைய வார்த்தை உங்களுக்குள் வாழவும் கிரியை செய்யவும் தொடங்குகிறது. இதன் பொருள், நீங்கள் பேசுவதும் செய்வதும் உங்கள் இருதயத்தில் உள்ள தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதாகும். இயேசு இந்த பூமியில் வாழ்ந்தபோது இதை நமக்குக் காட்டினார்.

அவர் செய்த எல்லாமே தேவனுடைய அன்பு, ஞானம் மற்றும் வல்லமையை வெளிப்படுத்தின. அதே வழியில், தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு நாளும் உங்கள் எண்ணங்களையும், வார்த்தைகளையும், செயல்களையும் வழிநடத்துகிறது. நீங்கள் அன்பாகப் பேசும்போது, மற்றவர்களை மன்னிக்கும்போது, ஜெபிக்கும்போது, பைபிள் சொல்வதைச் செய்யும்போது, நீங்கள் மற்றவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் காண்பிக்கிறீர்கள்.

மக்கள் வாசிக்கக்கூடிய ஒரு கடிதத்தைப் போல உங்கள் வாழ்க்கை மாறுகிறது, அது இயேசு யார் என்பதை அவர்களுக்குக் காட்டுகிறது. தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் வாழட்டும், நீங்கள் செல்லும் இடமெல்லாம் அது உங்கள் மூலம் பிரகாசிக்கட்டும்.

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 3:2-3**

**ஜெபம் செய்வோம்**

அன்பான பரலோக பிதாவே,
உம்முடைய வார்த்தை என் இருதயத்தில் வாழ்வதற்காக நன்றி. நான் உம்முடைய வார்த்தையின்படி வாழ்கிறேன்;
உம்முடைய அன்பு, ஞானம் மற்றும் வல்லமை ஒவ்வொரு நாளும் என் வாழ்க்கையில் காணப்படுகிறது,
இயேசுவின் நாமத்தில். ஆமென்.

திங்கள்
3

# உண்மையான ஆராதனை இருதயத்திலிருந்து வருகிறது

## சங்கீதம் 141:2

என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது.



தேவனை ஆராதிப்பது மிகவும் விசேஷமானது. உண்மையான ஆராதனை நம் இருதயத்திலிருந்து வருகிறது என்று பைபிள் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

சில நேரங்களில் மக்கள் உற்சாகமாகவோ அல்லது மகிழ்ச்சியாகவோ இருக்கும்போது கைதட்டுகிறார்கள், இது மகிழ்ச்சியைக் காட்டுவதற்கான ஒரு வழியாக இருக்கலாம். ஆனால் உண்மையான ஆராதனை என்பது கைதட்டுவதற்கும் மேலானது. உண்மையான ஆராதனை என்பது நீங்கள் தேவனிடம் பேசுவதும், அவருக்குப் பாடுவதும், ஜெபிப்பதும், அன்போடும் மரியாதையோடும் உங்கள் கைகளை உயர்த்துவதும் ஆகும்.

தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்று இயேசு கூறினார் (யோவான் 4:23–24). இதன் பொருள் நம் இருதயங்கள் அவர் மேல் மட்டுமே நோக்கமாக இருக்க வேண்டும். நீங்கள் உண்மையுள்ள இருதயத்தோடு ஜெபிக்கும்போதும், பாடும்போதும், தேவனுக்கு நன்றி சொல்லும்போதும், அவர் தகுதியுள்ள ஆராதனையை நீங்கள் அவருக்குச் செலுத்துகிறீர்கள்.

### வேத வாசிப்பு: யோவான் 4:23-24

**இதை சொல்லுங்கள்**

கிருபையுள்ள பரலோக பிதாவே, என் முழு இருதயத்தோடும் உம்மை ஆராதிக்கிறேன். என் வார்த்தைகளும், பாடல்களும், ஜெபங்களும் இன்றும் என்றும் உம்மை மகிமைப்படுத்துகின்றன. உம்மை எவ்வாறு உண்மையாக ஆராதிக்க வேண்டும் என்று எனக்குக் கற்றுக்கொடுத்ததற்காக நன்றி, இயேசுவின் நாமத்தில். ஆமென்.

செவ்வாய்

4

# தேவனுடைய வார்த்தைக்கு இணக்கமான வார்த்தைகளைப் பேசுங்கள்

## மல்கியா 3:13

நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்...



நாம் பேசும் வார்த்தைகளைத் தேவன் கவனிக்கிறார். பைபிளில், சிலர் தேவன் சொன்னதற்கு இணங்காத வழிகளில் பேசினார்கள். தங்களது வார்த்தைகள் அவருக்கு விரோதமாக இருக்கின்றன என்பதை அவர்கள் உணரக்கூட இல்லை.

நம்முடைய வார்த்தைகள் தேவனுடைய சத்தியத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், பலமுள்ளவர்கள் மற்றும் அவரால் பராமரிக்கப்படுபவர்கள் என்று அவருடைய வார்த்தை கூறுகிறது. எனவே, எதிர்மறையான காரியங்களைப் பேசுவதற்குப் பதிலாக, தேவன் என்ன சொல்லுகிறாரோ அதை நாம் பேச வேண்டும். ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது என்று பைபிள் கற்றுக்கொடுக்கிறது (நீதிமொழிகள் 18:21).

நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போது, உங்கள் வாழ்க்கையை விசுவாசத்தாலும் வெற்றியாலும் நிரப்புகிறீர்கள். எப்போதும் தேவன் தம்முடைய வார்த்தையில் சொல்லியிருப்பதற்கு இணக்கமான வார்த்தைகளையே தேர்ந்தெடுத்துப் பேசுங்கள்.

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 4:13**

**ஜெபம் செய்வோம்**

**அன்புள்ள பரலோக பிதாவே, உம்முடைய சத்தியத்திற்கு இணக்கமான வார்த்தைகளைப் பேச எனக்குக் கற்றுக்கொடுத்ததற்காக நன்றி. என் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் விசுவாசமும், ஜீவனும், வெற்றியும் நிறைந்தவைகளாக இருக்கின்றன, இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

புதன்

5

# தேவன் உங்களை நீதிமானாக்கினார்

## 2 கொரிந்தியர் 5:21

நாம் அவளுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.



இயேசுவின் மூலமாகத் தேவன் நமக்காக ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார். இயேசு ஒருபோதும் பாவம் செய்யவில்லை, ஆனால் நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாகும்படி அவர் நம்முடைய இடத்தைப் பெற்றுக்கொண்டார். இதன் பொருள், நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் உங்களைச் சுத்தமானவர்களாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், தமக்கு முன் நீதியுள்ளவர்களாகவும் பார்க்கிறார்.
உங்களுடைய சொந்த முயற்சிகளால் நீங்கள் நீதிமானாக மாற முயலவில்லை. தேவன் ஏற்கனவே உங்களைக் கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கியுள்ளார். அது ஒரு அழகான பரிசு! இதினிமித்தம், நீங்கள் மகிழ்ச்சியோடும் தைரியத்தோடும் தேவனிடத்திற்கு வரலாம்.
கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள்: இயேசுவின் மூலம் நீதிமானாக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை நீங்கள்.

**வேத வாசிப்பு: ரோமர் 5:1**

நான் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய நீதியாய் இருக்கிறேன். நான் தேவனுடைய சமுகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகவும், அன்புகூரப்பட்டவனாகவும், தைரியமுள்ளவனாகவும் இருக்கிறேன். அல்லேலூயா!

**இதை சொல்லுங்கள்**

வியாழன்
6

# தேவன் உங்களைப் பார்க்கிறபடியே நீங்களும் உங்களைப் பாருங்கள்

## 1 பேதுரு 2:9

நீங்களோ,...தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.



தேவன் உங்களைப் பார்க்கிறபடியே நீங்களும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இயேசுவின் மூலம், நீங்கள் தேவனுடைய நீதியாக மாறியிருக்கிறீர்கள். இதன் பொருள் நீங்கள் அவருடைய அன்பான பிள்ளை, அவருடைய ஜீவனாலும் நன்மையாலும் நிரப்பப்பட்டவர்கள்.

நீங்கள் இதை அறிந்துகொள்ளும்போது, அது நீங்கள் சிந்திக்கும் மற்றும் செயல்படும் விதத்தை மாற்றுகிறது. நீங்கள் இனி உங்களைச் சிறியவர்களாகவோ அல்லது பயந்தவர்களாகவோ உணர மாட்டீர்கள். அதற்குப் பதிலாக, தேவன் உங்களுடனே இருக்கிறார் என்பதை அறிந்து, தைரியத்தோடு வாழ்வீர்கள். நீங்கள் அவருக்குச் சொந்தமானவர் என்பதையும், அவருடைய தெய்வீக சுபாவத்தை உங்களுக்குள் சுமக்கிறீர்கள் என்பதையும் எப்போதும் நினைவில் வையுங்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் தேவனுடைய அற்புதமான பிள்ளையாகவே சிந்தித்து, பேசி, வாழுங்கள்.

**வேத வாசிப்பு: ஏசாயா 54:17**

**ஜெபம் செய்வோம்**

அன்பான பரலோக பிதாவே, என்னை உம்முடைய நீதியுள்ள பிள்ளையாக மாற்றியதற்காக நன்றி. நீர் என்னைப் பார்க்கிறபடியே நானும் என்னைப் பார்க்கிறேன்; ஒவ்வொரு நாளும் நான் விசுவாசத்தோடும் மகிழ்ச்சியோடும் வாழ்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

வெள்ளி

7

# இயேசு கிறிஸ்து தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நமக்குக் காட்டுகிறார்

## கொலோசெயர் 1:19

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,



இயேசு ஒரு சிறந்த போதகர் அல்லது ஒரு நல்ல மனிதர் என்பதற்கும் மேலானவர்.

தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது என்று பைபிள் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இதன் பொருள் நாம் இயேசுவைப் பார்க்கும்போது, தேவன் எப்படிப்பட்டவர் என்பதைப் பார்க்கிறோம். இயேசு தாம் சென்ற இடமெல்லாம் தேவனுடைய அன்பு, தயவு, ஞானம் மற்றும் வல்லமையை வெளிப்படுத்தினார். அவர் மக்களுக்கு உதவினார், நோயாளிகளைக் குணமாக்கினார், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்களுக்குப் போதித்தார். அதனால்தான் இயேசு, "...என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்..." என்று கூறினார் (யோவான் 14:9). வேதாகமத்தில் இயேசுவைக் குறித்து நீங்கள் கற்றுக்கொள்ளும்போது, நீங்கள் தேவனைப் பற்றியே கற்றுக்கொள்கிறீர்கள்.

நீங்கள் இயேசுவை எவ்வளவு அதிகமாக அறிந்துகொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகத் தேவனுடைய அன்பையும் நன்மையையும் புரிந்துகொள்வீர்கள்.

### வேத வாசிப்பு: யோவான் 14:9

அன்புள்ள பரலோக பிதாவே, இயேசுவின் மூலமாக நீர் யார் என்பதை எங்களுக்குக் காட்டியதற்காக நன்றி. உம்முடைய வார்த்தையில் நான் அவரைப் பற்றிக் கற்றுக்கொள்ளும்போது, ஒவ்வொரு நாளும் உம்மை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளவும் அன்பு கூரவும் வளருகிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

ஜெபம் செய்வோம்

சனி

8

# இயேசுவின் வல்லமையுள்ள நாமம்

## பிலிப்பியர் 2:10

இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்...



இயேசுவின் நாமம் மிகவும் வல்லமை வாய்ந்தது. தேவன் அவருக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் தந்திருக்கிறார். இயேசுவின் நாமத்தில் வானோர், பூலோகத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்க வேண்டும் என்று பைபிள் கூறுகிறது. இதன் பொருள் அவருடைய நாமத்தை விட பெரியது எதுவுமில்லை. நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது, அவர் உங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்துகிறீர்கள். அதனால்தான் நாம் அவருடைய நாமத்தை விசுவாசத்தோடும் மரியாதையோடும் உச்சரிக்கிறோம்.

நீங்கள் ஜெபிக்கும்போதும், தேவனுக்கு நன்றி செலுத்தும்போதும், அல்லது மற்றவர்கள் அவரை அறிந்துகொள்ள உதவும்போதும், இயேசுவின் நாமம் வல்லமை, வெற்றி மற்றும் இரட்சிப்பைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் வையுங்கள்.

**வேத வாசிப்பு: கொலோசெயர் 2:3**

**இதை சொல்லுங்கள்**

**இயேசுவின் நாமம் வல்லமையுள்ளது. நான் அவருடைய நாமத்தை விசுவாசத்தோடு பேசுகிறேன், ஒவ்வொரு நாளும் வெற்றியில் வாழ்கிறேன். அல்லேலூயா!**

ஞாயிரு

9

# கர்த்தருக்காகத் தைரியமாய் இருங்கள்

## அப்போஸ்தலர் 2:4

**அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.**



பேதுரு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, பயந்தவனாய் இருந்தார்; இயேசுவை தமக்குத் தெரியாது என்று மறுதலிக்கவும் செய்தார் (மத்தேயு 26:69-75). ஆனால் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்ற பிறகு, எல்லாமே மாறியது (அப்போஸ்தலர் 2:1-4).
பேதுரு தைரியமடைந்து இயேசுவைக் குறித்துப் பிரசங்கிக்கத் தொடங்கினார். ஒரு விசேஷித்த நாளில், அவருடைய செய்தியின் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கர்த்தரை விசுவாசித்தார்கள் (அப்போஸ்தலர் 2:41). இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது எது? அவருக்குள் கிரியை செய்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையே ஆகும்.
அதே பரிசுத்த ஆவியானவர் இன்றும் உங்களுக்குள் வாழ்கிறார். நீங்கள் தைரியமாக இருக்கவும், இயேசுவைக் குறித்துப் பேசவும், சரியானதைச் செய்யவும் அவர் உங்களுக்கு உதவுகிறார். நீங்கள் தனிமையில் இல்லை. உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரோடு, நீங்கள் ஒவ்வொரு நாளும் தைரியமாக வாழ்ந்து கர்த்தருக்காகப் பிரகாசிக்க முடியும்.

**வேத வாசிப்பு: அப்போஸ்தலர் 2:41**

**ஜெபம் செய்வோம்**

**அன்புள்ள பரலோக பிதாவே, ஒவ்வொரு நாளும் எனக்கு உதவி செய்யும்படி பரிசுத்த ஆவியானவரை எனக்குத் தந்ததற்காக நன்றி. நான் தைரியமும் பலமும் உள்ளவராய் இருக்கிறேன், மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். ஆமென்.**

திங்கள்
10

# தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது

## 2 பேதுரு 1:4

... திவ்விய சுபாவத்துக்குப்
பங்குள்ளவர்களாகும்பொருட்டு,...



நீங்கள் இயேசுவை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளும்போது, ஒரு பெரிய காரியம் நடக்கிறது; தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் வருகிறது. நாம் தெய்வீக சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகிறோம் என்று பைபிள் கூறுகிறது. இதன் பொருள், நீங்கள் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ உங்களுக்கு உதவ தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் கிரியை செய்கிறது. தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் இருப்பதினால், நீங்கள் பலமுள்ளவர்களாகவும், மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், தைரியம் நிறைந்தவர்களாகவும் இருக்க முடியும். பைபிளில் உள்ள தீமோத்தேயுவை நினைவிருக்கிறதா?
அவர் பயந்த சுபாவமுள்ளவராய் இருந்தார், ஆனால் அவருக்குள் இருக்கும் ஆவியானவர் அவரைப் பலமும் தைரியமும் உள்ளவராக்கினார் என்று பவுல் அவருக்கு நினைப்பூட்டினார் (2 தீமோத்தேயு 1:6-7). தேவனுடைய ஜீவன் எல்லாவற்றையும் மாற்றியது. அதே ஆவியானவர் இன்றும் உங்களுக்குள் இருக்கிறார், ஒவ்வொரு நாளும் நீங்கள் பலத்தோடும், தைரியத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ உதவுகிறார்.

**வேத வாசிப்பு: அப்போஸ்தலர் 4:13**

**ஜெபம் செய்வோம்**

**தேவனுடைய ஜீவன் எனக்குள் இருக்கிறது. நான் தேவனுடைய தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருப்பதால் பலமுள்ளவளாகவும், தைரியமுள்ளவளாகவும், மகிழ்ச்சி நிறைந்தவளாகவும் இருக்கிறேன். அல்லேலூயா! ஆமென்.**

செவ்வாய்

11

# நீங்கள் தேவனுடைய விசேஷித்த பிள்ளை

1 பேதுரு 2:9

நீங்களோ,...தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.



நீங்கள் தேவனுக்கு மிகவும் விசேஷமானவர் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியின் ஒரு பகுதி என்றும், தேவனுக்குச் சொந்தமான விசேஷித்த ஜனங்கள் என்றும் பைபிள் கூறுகிறது. இதன் பொருள் நீங்கள் அவருக்குச் சொந்தமானவர், அவர் உங்கள் மேல் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்.

தேவன் தம்முடைய நன்மைகளை மற்றவர்களுக்குக் காண்பிக்கும்படி, உங்களை இருளிலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தார். உங்களுடைய வார்த்தைகள், செயல்கள் மற்றும் தயவு ஆகியவை தேவன் எவ்வளவு அற்புதமானவர் என்பதை மக்கள் அறிந்துகொள்ள உதவக்கூடும். தேவன் தம்முடைய வார்த்தையில் உங்களுக்குக் கற்றுக்கொடுக்கிறபடி நீங்கள் வாழும்போது, அவருக்காகப் பிரகாசிக்கிறீர்கள்.

நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். தேவனுடைய அன்பையும் நன்மையையும் உலகிற்கு வெளிப்படுத்தும்படி தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய விசேஷித்த பிள்ளை நீங்கள்.

## வேத வாசிப்பு: கொலோசெயர் 1:12-13

அன்புள்ள தேவனே, என்னை உம்முடைய விசேஷித்த பிள்ளையாகத் தெரிந்துகொண்டதற்காக நன்றி. நான் செல்லும் இடமெல்லாம் உம்முடைய ஒளியைப் பிரகாசிப்பிக்கவும், உம்முடைய நன்மையைக் காண்பிக்கவும் எனக்கு உதவி செய்யும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

ஜெபம் செய்வோம்

புதன்

12

# நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

## 1 பேதுரு 3:9

தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.



தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் ஆசீர்வாதங்கள் நிறைந்த வாழ்க்கையை வாழ அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று பைபிள் கூறுகிறது. இதன் பொருள் தேவன் உங்கள் வாழ்க்கையில் நன்மைகள் கிரியை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, ஒரு புதிய சிருஷ்டியாக மாறி, தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராகிறீர்கள்.

எந்தவொரு சாபமும், பயமும் அல்லது அந்தகாரத்தின் வல்லமையும் உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த முடியாது. தேவன் ஏற்கனவே உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதித்துள்ளார். எனவே பயப்படுவதற்குப் பதிலாக, நீங்கள் யார் என்பதை நினைவில் வையுங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளை, அவருடைய ஆசீர்வாதம் உங்கள் மேல் இருக்கிறது. நீங்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர் என்பதால் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடும் தைரியத்தோடும் நடங்கள்.

## வேத வாசிப்பு: எபேசியர் 1:3

நான் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளாக இருக்கிறேன். தேவனுடைய ஆசீர்வாதங்கள் என் வாழ்க்கையில் கிரியை செய்கின்றன; நான் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி, வெற்றி மற்றும் சமாதானத்தோடு வாழ்கிறேன். அல்லேலூயா!

இதை சொல்லுங்கள்

# திருவிருந்து பற்றிய



பற்றிய

## பைபிள் உண்மைகள்

1. இயேசு நமக்குக் கீழ்ப்படிதலின் மிகச்சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறார். அவர் எல்லாவற்றிலும், கடினமான சூழ்நிலைகளிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார் (யோவான் 12:26).

2. நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது, நாம் அவரை நேசிக்கிறோம் என்பதைக் காட்டுகிறோம். இயேசு, “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்றார் (யோவான் 14:15).

3. நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது, நம்முடைய இருதயங்கள் அவருக்குச் சொந்தமானவை என்பதைக் காட்டுகிறோம். கீழ்ப்படிதல் நம்முடைய அன்பையும் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கிறது (யோவான் 14:15).

4. தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். அவர், “இப்பொழுது நீங்கள் என் வாக்குகளைக் கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்தச் சம்பத்தாயிருப்பீர்கள்” என்றார் (யாத்திராகமம் 19:5).

5. கீழ்ப்படிதல் நம் வாழ்க்கையில் நன்மைகளைக் கொண்டுவருகிறது. “இன்று நான் உனக்குக் விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ அவர் சத்தத்திற்குச் ஜாக்கிரதையாய்க் கீழ்ப்படிவாயானால்...

# திருவிருந்து பற்றிய



இந்த ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப்பலிக்கும்" (உபாகமம் 28:1–2).

6. கீழ்ப்படிதல் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் தருகிறது. "நீங்கள் சம்மதித்து உத்தேசத்தைக் கேட்டால், பூமியின் நன்மையைப் புசிப்பீர்கள்" (ஏசாயா 1:19).

7. தனக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்கிறவர்களைத் தேவன் கனப்படுத்துகிறார். இயேசு, "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனப்படுத்துவார்" என்றார் (யோவான் 12:26).

8. தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களை அவர் வழிநடத்துகிறார். "வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே கேட்கும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30:21).

9. தேவனுக்குக் கீழ்ப்படிவது அற்புதங்களுக்கு வழிவகுக்கும். பேதுரு இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தபோது, அவர் திரளான மீன்களைப் பிடித்தார் (லூக்கா 5:5–6).

10 பிள்ளைகள் கர்த்தருக்குள் தங்களது பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக்காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" (கொலோசெயர் 3:20).

வியாழன்
13

# தேவனுடைய வார்த்தையின் மூலம் விடுதலை

## யோவான் 8:32

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.



தேவனுடைய சத்தியம் விடுதலையைக் கொண்டுவருவதால், நீங்கள் அவருடைய வார்த்தையை அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.
தேவன் தங்களைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மக்கள் அறியாதபோது, அவர்கள் பயப்படலாம் அல்லது தங்களது வாழ்க்கையில் ஏதோ தவறு இருப்பதாக நினைக்கலாம். ஆனால் நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளும்போது, நீங்கள் உண்மையிலேயே யார் என்பதைக் கண்டுகொள்கிறீர்கள். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், அன்புகூரப்பட்டவர்கள் மற்றும் பாதுகாக்கப்பட்டவர்கள் என்று பைபிள் கூறுகிறது (சங்கீதம் 5:12).
இந்தச் சத்தியத்தை அறிந்துகொள்வது உங்கள் இருதயத்தை விசுவாசத்தினாலும் தைரியத்தினாலும் நிரப்புகிறது. நீங்கள் பயத்திற்கும் அந்தகாரத்தின் எல்லா வல்லமைக்கும் மேலாக வாழ முடியும் என்பதை தேவனுடைய வார்த்தை உங்களுக்குக் காட்டுகிறது. நீங்கள் அவருடைய வார்த்தையைப் படித்து விசுவாசிக்கும்போது, தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள விடுதலை மற்றும் வெற்றியில் வாழ்வீர்கள்.

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 5:17**

**ஜெபம் செய்வோம்**

**பரலோக பிதாவே, எனக்குச் சத்தியத்தைக் கற்றுக்கொடுக்கும் உம்முடைய வார்த்தைக்காக நன்றி. நான் அதை அறிந்துகொண்டு விசுவாசிக்கும்போது, ஒவ்வொரு நாளும் விடுதலை, தைரியம் மற்றும் வெற்றியில் வாழ்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

வெள்ளி

14

# இயேசு உங்கள் வாழ்க்கையின் கர்த்தர்

## அப்போஸ்தலர் 20:32

இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும்... வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.



நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, அவர் உங்கள் வாழ்க்கையின் கர்த்தராக மாறுகிறார். இதன் பொருள் நீங்கள் அவரைப் பின்பற்றவும், அவர் உங்களுக்குக் கற்றுக்கொடுக்கிற வழியில் வாழவும் தெரிந்தெடுக்கிறீர்கள்.

இயேசு தம்முடைய வார்த்தையாகிய பைபிளின் மூலம் உங்களை வழிநடத்துகிறார். அவருடைய வார்த்தை எது சரியானது என்பதைக் காட்டுகிறது மற்றும் ஒவ்வொரு நாளும் நீங்கள் நல்ல முடிவுகளை எடுக்க உதவுகிறது. நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியும்போது, இயேசு உண்மையிலேயே உங்கள் வாழ்க்கையின் கர்த்தர் என்பதைக் காண்பிக்கிறீர்கள். அவருடைய வார்த்தை நீங்கள் விசுவாசத்தில் பலப்பட்டு வளரவும், தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழவும் உதவும்.

எப்போதும் அவருடைய வார்த்தையைக் கேட்கவும், அதை மகிழ்ச்சியோடு பின்பற்றவும் நினைவில் வையுங்கள்.

## வேத வாசிப்பு: யாக்கோபு 1:21

**ஜெபம் செய்வோம்**

**கிருபையுள்ள பரலோக பிதாவே, என் வாழ்க்கையின் கர்த்தராகிய இயேசுவுக்காக நன்றி. நான் எப்போதும் உம்முடைய வார்த்தையைக் கேட்கவும், ஒவ்வொரு நாளும் அதை மகிழ்ச்சியோடு பின்பற்றவும் எனக்கு உதவி செய்யும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

சனி

15

# தேவனுடைய வார்த்தை உங்களைப் பலப்படுத்துகிறது

## எபேசியர் 6:10–11

கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.



தேவனுடைய வார்த்தை மிகவும் வல்லமையுள்ளது. அது உங்களைப் பக்திவிருத்தியடையச் செய்து, உங்களைப் பலப்படுத்த முடியும் என்று பைபிள் கூறுகிறது (அப்போஸ்தலர் 20:32).

நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போதும், கேட்கும்போதும், தியானிக்கும்போதும், அது உங்கள் விசுவாசம் வளர உதவுகிறது. மேலும், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிற அற்புதமான ஆசீர்வாதங்களை அது உங்களுக்கு நினைவூட்டுகிறது. நீங்கள் எவ்வளவு அதிகமாக தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நம்பிக்கையும் மகிழ்ச்சியும் உள்ளவர்களாக மாறுவீர்கள். ஆரோக்கியமான உணவு உங்கள் சரீரம் பலப்பட்டு வளர உதவுவது போல, தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு நாளும் உங்கள் ஆவி இன்னும் பலமுள்ளதாக வளர உதவுகிறது.

எனவே, பைபிளைப் படிப்பதற்கும், அது போதிக்கப்படும்போது கவனமாகக் கேட்பதற்கும் நேரத்தைச் செலவிடுங்கள். தேவனுடைய வார்த்தை உங்களை வழிநடத்தி, நீங்கள் ஒரு அழகான வாழ்க்கையை வாழ உதவும்.

**வேத வாசிப்பு: சங்கீதம் 119:105**

**தேவனுடைய வார்த்தை எனக்குள் கிரியை செய்கிறது. அது என்னைப் பக்திவிருத்தியடையச் செய்கிறது, என்னைப் பலப்படுத்துகிறது, ஒவ்வொரு நாளும் என்னை வழிநடத்துகிறது. அல்லேலூயா!**

**இதை சொல்லுங்கள்**

ஞாயிறு

16

# தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளுங்கள்

## 2 தீமோத்தேயு 2:15

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.



தேவனுடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தையை அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மக்கள் அறியாதபோது, அவர்கள் துன்பத்தில் அகப்படக்கூடும் என்று பைபிள் கூறுகிறது (ஓசியா 4:6).

நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளும்போது, அது எப்படி வாழ்வது மற்றும் சரியான முடிவுகளை எப்படி எடுப்பது என்பதைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவுகிறது. அது உங்கள் விசுவாசம் பலப்பட்டு வளரவும் உதவுகிறது. ஒரு விளக்கு இருளிலே வழியைக் காட்டுவது போல, தேவனுடைய வார்த்தை நீங்கள் பின்பற்ற வேண்டிய சரியான பாதையை உங்களுக்குக் காட்டுகிறது. நீங்கள் பைபிளை எவ்வளவு அதிகமாகப் படித்து, அது போதிக்கப்படும்போது கேட்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் ஞானமுள்ளவர்களாக மாறுவீர்கள்.

எப்போதும் தேவனுடைய வார்த்தையை நேசித்துக் கற்றுக்கொள்ளுங்கள், ஏனென்றால் அது உங்களை வழிநடத்தி, நீங்கள் ஒரு மகிழ்ச்சியான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ உதவுகிறது.

**வேத வாசிப்பு: 2 தீமோத்தேயு 3:16-17**

**ஜெபம் செய்வோம்**

அன்புள்ள அருமையான பிதாவே, ஒவ்வொரு நாளும் எனக்குப் போதித்து என்னை வழிநடத்தும் உம்முடைய வார்த்தைக்காக நன்றி. நான் எப்போதும் உம்முடைய சத்தியத்தில் நடக்கும்படி, உம்முடைய வார்த்தையை நேசிக்கவும் அதைத் கற்றுக்கொள்ளவும் எனக்கு உதவி செய்யும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

திங்கள்

17

# வெற்றி பெற தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துங்கள்

**லூக்கா 4:4**

...மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.




இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டபோது, அவர் வாதிடவோ அல்லது பயப்படவோ இல்லை. அதற்குப் பதிலாக, அவர் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு பதிலளித்தார். பிசாசு அவரைச் சோதிக்க முயன்ற ஒவ்வொரு முறையும், இயேசு "எழுதியிருக்கிறதே" என்று கூறி, வேத வசனங்களை எடுத்துரைத்தார் (மத்தேயு 4:1-11).

இயேசு தேவனுடைய வார்த்தையை அறிந்திருந்தார், அது அவர் உறுதியாய் நிற்க உதவியது. இது நமக்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கற்றுக்கொடுக்கிறது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை அறிந்திருக்கும்போது, தவறான எண்ணங்கள், பயம் மற்றும் சோதனைகளுக்கு எதிராக நிற்க அதை நீங்கள் பயன்படுத்தலாம்.

தேவனுடைய வார்த்தை உங்கள் விசுவாசத்திற்கு வழியையும் பலத்தையும் தருகிறது. நீங்கள் அதைக் கற்றுக்கொண்டு பேசும்போது, சரியான முடிவுகளை எடுப்பதற்கான ஞானமும் தைரியமும் உங்களுக்கு எப்போதும் இருக்கும்.

**வேத வாசிப்பு: எபேசியர் 6:17**

**இதை சொல்லுங்கள்**

**தேவனுடைய வார்த்தை என் இருதயத்தில் வாழ்கிறது. நான் சத்தியத்தை அறிவேன், மேலும் நான் உறுதியாய் நிற்கவும், ஒவ்வொரு நாளும் வெற்றியில் வாழவும் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். அல்லேலூயா!**

செவ்வாய்

18

# கர்த்தராகிய இயேசுவுக்குக் அர்ப்பணியுங்கள்

## யாக்கோபு 4:7

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.**



நீங்கள் ஒவ்வொரு நாளும் இயேசுவை உங்கள் வாழ்க்கையின் கர்த்தராகக் கொண்டு வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதன் பொருள், நீங்கள் அவரை உங்களை வழிநடத்த அனுமதிக்கிறீர்கள், மற்றும் அவர் தம்முடைய வார்த்தையில் சொல்லியிருக்கிறபடி செய்கிறீர்கள்.

நீங்கள் இயேசுவுக்கு உண்மையிலேயே உங்களை அர்ப்பணிக்கும்போது, அவருடைய வல்லமை உங்கள் வாழ்க்கையில் அதிக விடுதலையோடு கிரியை செய்கிறது. சிலர் ஜெபமும் உபவாசமும் அதிக வல்லமையைச் செயல்படுத்துவதற்கான வழிகள் என்று மட்டுமே நினைக்கிறார்கள், ஆனால் அவை உங்கள் இருதயம் கர்த்தருக்கு இன்னும் அதிகமாகக் கீழ்ப்படிவதற்கும் உதவுகின்றன.

நீங்களும் இயேசுவுக்கு எவ்வளவு அதிகமாகக் கீழ்ப்படிகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக விசுவாசத்தில் பலப்படுவீர்கள். அப்போது நீங்கள் பயமில்லாமல் பிசாசுக்கு எதிராக நிற்க முடியும். எப்போதும் நினைவில் வையுங்கள்: இயேசுவே கர்த்தர், நீங்கள் அவரை மகிழ்ச்சியோடு பின்பற்றும்போது, அவருடைய வெற்றியிலும் பலத்திலும் நடப்பீர்கள்.

## வேத வாசிப்பு: பிலிப்பியர் 2:9-11

### ஜெபம் செய்வோம்

**அன்புள்ள மகிமையின் பிதாவே, இயேசுவின் கர்த்தத்துவத்திற்கு எங்களை அர்ப்பணிக்க எனக்குக் கற்றுக்கொடுப்பதற்காக நன்றி. நான் மகிழ்ச்சியோடு உம்முடைய வார்த்தையைப் பின்பற்றுகிறேன், உம்முடைய வல்லமை ஒவ்வொரு நாளும் எனக்குள் விடுதலையோடு கிரியை செய்கிறது, இயேசுவின் நாமத்தில். மென்.**

புதன்
19

# பொருட்களை அல்ல, தேவனை நம்புங்கள்

## நீதிமொழிகள் 3:5-6

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து; உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.



தேவனுடைய பிள்ளையாக, உங்கள் விசுவாசம் எப்போதும் தேவன் மேலும் அவருடைய வார்த்தையின் மேலும் இருக்க வேண்டுமே தவிர, பொருட்கள் மேல் அல்ல.
சில மக்கள் தேவனிடமிருந்து உதவியைப் பெறுவதற்கு கைக்குட்டைகள், தண்ணீர் அல்லது பிற பொருட்கள் போன்ற விசேஷித்த காரியங்கள் தங்களுக்குத் தேவை என்று நினைக்கிறார்கள். ஆனால் தேவனுடனான நம்முடைய உறவு பொருட்கள் மேல் கட்டமைக்கப்படவில்லை என்றே பைபிள் போதிக்கிறது. பவுலின் கைக்குட்டைகளும் கச்சைகளும் வியாதிக்காரர்களைக் குணமாக்கின என்று பைபிள் நமக்குச் சொல்கிறதுதான் (அப்போஸ்தலர் 19:11-12), ஆனால் அவற்றின் மேல் சார்ந்திருக்கும்படி அவர் நமக்கு ஒருபோதும் போதிக்கவில்லை.
தேவன் தம்முடைய ஆவியினாலே உங்களுக்குள் வாழ்கிறார், நீங்கள் அவரிடம் எங்கும் எந்த நேரத்திலும் பேசலாம். உங்கள் ஜெபங்களும், உங்கள் விசுவாசமும், அவருடைய வார்த்தையின் மேல் நீங்கள் வைக்கும் நம்பிக்கையுமே எல்லாவற்றையும் விட மிக முக்கியமானவை. தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்கிறார் மற்றும் உங்கள் மேல் அக்கறையாக இருக்கிறார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். உங்கள் நம்பிக்கையை அவர் மேலும், அவருடைய வார்த்தை என்ன சொல்கிறதோ அதன் மேலும் வையுங்கள்.

### வேத வாசிப்பு: எரேமியா 17:7

**ஜெபம் செய்வோம்**

அன்புள்ள உண்மையுள்ள பிதாவே, என் முழு இருதயத்தோடும் உம்மை நம்பும்படி எனக்குக் கற்றுக்கொடுத்ததற்காக நன்றி. என் விசுவாசம் உம்முடைய வார்த்தையின் மேல் இருக்கிறது, மேலும் நீர் எப்போதும் என்னோடு இருக்கிறீர் என்பதை நான் அறிவேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

வியாழன்

20

# நீங்கள் ஒரு ஆசீர்வாதம்

## ஆதியாகமம் 12:2

...நான் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.



தேவனுடைய பிள்ளையாக, எல்லாவற்றையும் நீங்கள் உடையவர்களாய் இருக்கிறீர்கள். எனவே, எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆபிரகாம் ஒரு ஆசீர்வாதமாக இருந்தார், அவன் நிமித்தம் அவனுடைய சகோதரன் மகனாகிய லோத்தும் ஆசீர்வதிக்கப்பட்டான் என்பதை நினைவில் வையுங்கள் (ஆதியாகமம் 13:5-6). தேவன் ஒருவரை ஆசீர்வதிக்க விரும்பும்போது, அவர் உங்களை அவர்களிடம் அனுப்புகிறார்; ஏனென்றால், நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாய் இருக்கும்படி, தேவன் உங்களை எல்லா ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.

உங்கள் நண்பரோ அல்லது உங்களைச் சுற்றியுள்ள எவரோ தங்கள் உடலில் வலியை உணர்ந்தால், நீங்கள் ஜெபித்து அவர்கள்மேல் கைகளை வைக்கும்போது அவர்கள் குணமடையலாம்; ஏனெனில் தேவன் உங்களுக்குள் வாழ்கிறார்.

நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்று உங்கள் மனதில் தீர்மானியுங்கள்.

**வேத வாசிப்பு: எபேசியர் 1:3**

**ஜெபம் செய்வோம்**

**அருமையான பிதாவே, என்னை என் உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாக மாற்றியதற்காக நன்றி. என் மூலமாக மற்றவர்கள் உம்முடைய அன்பு, கிருபை மற்றும் மகிமையை அறிந்துகொள்வார்கள், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

வெள்ளி

21

# உங்கள் இருதயத்திலிருந்து தேவனை ஆராதியுங்கள்

**யோவான் 4:24**

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.



நாம் தேவனை உண்மையோடு ஆராதிப்பதை அவர் நேசிக்கிறார். உண்மையான ஆராதனை என்பது பிறருக்குக் காண்பிப்பதிலிருந்தோ அல்லது வீணான பாரம்பரியங்களைப் பின்பற்றுவதிலிருந்தோ வருவதில்லை. அது தேவனை நேசிக்கும் இருதயத்திலிருந்து வருகிறது. நீங்கள் உண்மையோடு ஜெபிக்கும்போதும், பாடும்போதும், தேவனுக்கு நன்றி செலுத்தும்போதும், உண்மையான ஆராதனையை அவருக்குச் செலுத்துகிறீர்கள். தேவனை ஆராதிக்க உங்களுக்கு விசேஷித்த பொருட்களோ அல்லது சடங்குகளோ தேவையில்லை, ஏனென்றால் அவர் தம்முடைய ஆவியினாலே உங்களுக்குள் வாழ்கிறார். உங்கள் இருதயத்திலிருந்து வரும் பாடல்களும், ஜெபங்களும், துதி வார்த்தைகளும் அவருக்குப் பிரியமானவை விலையேறப்பெற்றவை.

தேவன் உங்கள் துதிக்குச் செவிசாய்க்கிறார், தம்முடைய பிள்ளைகளின் துதியில் மகிழ்ச்சியடைகிறார் என்பதை அறிந்து, எப்போதும் அன்போடும், மகிழ்ச்சியோடும், உண்மையோடும் தேவனை ஆராதியுங்கள்.

**வேத வாசிப்பு: சங்கீதம் 95:6**

**இதை சொல்லுங்கள்**

**நான் என் இருதயத்திலிருந்து தேவனை ஆராதிக்கிறேன். என் பாடல்களும், ஜெபங்களும், துதிகளும் ஒவ்வொரு நாளும் அவர்மேல் உள்ள அன்பினால் நிறைந்திருக்கின்றன. அல்லேலூயா!**

சனி

22

# தொடர்ந்து கற்றுக்கொண்டு வளருங்கள்

2 பேதுரு 1:5

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,



தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து கற்றுக்கொண்டு, வளர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

இன்றைய மனன வசனம், நம்முடைய விசுவாசத்தோடு அறிவைக் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று நமக்குச் சொல்கிறது. இதன் பொருள் நாம் ஒவ்வொரு நாளும் அதிகமாய்க் கற்றுக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும் ஆர்வமாக இருக்க வேண்டும் என்பதாகும். நீங்கள் உங்கள் பைபிளைப் படிக்கும்போதும், நல்ல புத்தகங்களை வாசிக்கும்போதும், தேவனுடைய வார்த்தை போதிக்கப்படும்போது கவனமாகக் கேட்கும்போதும், உங்கள் மனம் அதிக வலிமையுள்ளதாகவும் ஞானமுள்ளதாகவும் மாறுகிறது.

அறிவு நீங்கள் சிறந்த முடிவுகளை எடுக்கவும் வெற்றிகரமாக வாழவும் உதவுகிறது. தம்முடைய பிள்ளைகள் அறியாமையில் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. அதற்குப் பதிலாக, நீங்கள் ஞானத்திலும் புத்தியிலும் வளர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். எனவே, ஆர்வமாக இருங்கள், கேள்விகளைக் கேளுங்கள், ஒவ்வொரு நாளும் உங்களைச் சிறந்தவர்களாக மாற்ற உதவும் புதிய காரியங்களைக் கற்றுக்கொள்வதை மகிழ்ச்சியோடு செய்யுங்கள்.

பிள்ளைகளுக்கான தியானப் பகுதிகளை பிற மொழிகளில் பெற ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: நீதிமொழிகள் 4:7**

**ஜெபம் செய்வோம்**

அன்புள்ள நீதியுள்ள பிதாவே, உம்முடைய வார்த்தையின் மூலம் எனக்குப் போதிப்பதற்காக நன்றி. நான் கற்றுக்கொள்ளும்போதும் படிக்கும்போதும் ஒவ்வொரு நாளும் ஞானத்திலும் அறிவிலும் வளர எனக்கு உதவி செய்யும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

ஞாயிறு

23

# உங்களை உருவாக்கும் அறிவை தேர்ந்தெடுங்கள்

## ஓசியா 4:6

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்...



எல்லா அறிவும் பிரயோஜனமானவை அல்ல, எனவே சரியான வகையான அறிவைத் தேர்ந்தெடுப்பது முக்கியம். உங்களைக் கட்டியெழுப்பும் (வளர்க்கும்) அறிவினால் உங்கள் இருதயத்தையும் மனதையும் நிரப்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

மிகச்சிறந்த அறிவு தேவனுடைய வார்த்தையிலிருந்தே வருகிறது, ஏனென்றால் அது நீங்கள் எப்படி வாழ வேண்டும், சிந்திக்க வேண்டும் மற்றும் ஞானமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று உங்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது. நீங்கள் பைபிளைப் படித்து, தேவபக்தியுள்ள போதனைகளைக் கேட்கும்போது, உங்கள் விசுவாசம் இன்னும் பலமடைகிறது.

இத்தகைய அறிவு, தேவன் உங்களை எதற்காகப் படைத்தாரோ, அந்த அற்புதமான மனிதராக நீங்கள் வளர்வதற்கு உதவுகிறது. உங்கள் விசுவாசத்தை ஊக்குவிக்கும் மற்றும் ஒவ்வொரு நாளும் உங்களை அதிக ஞானமுள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும், சிறந்தவர்களாகவும் மாற்ற உதவும் காரியங்களைக் கற்றுக்கொள்ள எப்போதும் தேர்ந்தெடுங்கள்.

**வேத வாசிப்பு: கொலோசெயர் 1:9**

**இதை சொல்லுங்கள்**

**தேவனுடைய வார்த்தை என் மனதை ஞானத்தினாலும் புத்தியினாலும் நிரப்புகிறது. நான் தேவனுடைய சத்தியத்தைக் கற்றுக்கொண்டு அதைப் பின்பற்றும்போது, ஒவ்வொரு நாளும் அதிக பலமுள்ளவனாகவும்/பலமுள்ளவளாகவும், ஞானமுள்ளவனாகவும்/ ஞானமுள்ளவளாகவும் வளர்கிறேன். அல்லேலூயா!**

திங்கள்
24

# தேவனுடைய சத்தியத்திலே நடவுங்கள்

**3 யோவான் 1:4**

என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.



தேவனுடைய பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கும்போது அவர் மகிழ்ச்சியடைகிறார். தேவனுடைய சத்தியத்திலே நடப்பது என்பது ஒவ்வொரு நாளும் அவருடைய வார்த்தையின்படி வாழ்வதைக் குறிக்கிறது.

இயேசு தாமே சத்தியம் என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14:6), மேலும் தேவனுடைய வார்த்தையும் சத்தியமாய் இருக்கிறது. நீங்கள் பைபிளை வாசித்து, அது போதிப்பதன் படி செய்யும்போது, நீங்கள் சத்தியத்திலே நடக்கிறீர்கள். இது நீங்கள் சரியான முடிவுகளை எடுக்கவும், தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழவும் உதவுகிறது.

சத்தியத்திலே நடப்பது, மற்றவர்களும் உங்கள் வாழ்க்கையின் மூலம் தேவனுடைய நன்மையைக் காண உதவுகிறது. எப்போதும் தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதை மகிழ்ச்சியோடு பின்பற்றுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்போது, உங்கள் வாழ்க்கை தேவனுடைய ஒளியினால் பிரகாசிக்கும்.

**வேத வாசிப்பு: யோவான் 17:17**

**ஜெபம் செய்வோம்**

அன்புள்ள பிதாவே, சத்தியமாகிய உம்முடைய வார்த்தைக்காக உமக்கு நன்றி. என் வாழ்க்கை உமக்குப் பிரியமாக இருக்கும்படி, ஒவ்வொரு நாளும் உம்முடைய வார்த்தையின்படி வாழ எனக்கு உதவி செய்யும், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

# வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்

**வேகமான குறிப்புகள்,**
**புத்திசாலித்தனமான தேர்வுகள்!**



**வணக்கம் குழந்தைகளே! இந்த விளையாட்டில், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் குறிப்பைப் பயன்படுத்தி வசனத்தை முழுமையாக்குவதுதான், பிறகு அதைச் சத்தமாக வாசியுங்கள்! மகிழ்ச்சியாக விளையாடுங்கள்!**

## பகுதி 1

"சிறு ........ என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் ........ பண்ணாதிருங்கள்; தேவனுடைய ...... ........ அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ............. கொள்ளாவிட்டால், அவன் அதில் ........ பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை .........."

குறிப்பு : (மாற்கு 10:14-16)

## பகுதி 2

"நீங்கள் ஒன்றுக்குங் ........, எல்லாவற்றையுங்குறித்து உங்கள் ........ ஸ்தோத்திரத்தோடே கூடிய ................. வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது எல்லாப் புத்திக்கும் ........தேவ ........ உங்கள் ........ உங்கள் ........ கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் ........ ."

குறிப்பு: (பிலிப்பியர் 4:6-7 )

# கோடிட்ட இடங்களை நிரப்புக



**கீழே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை முழுமையாக்குவதற்கு, சரியான வார்த்தைகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள். குறிப்பு: சங்கீதம் 100:1-5.**

“பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் **.......1........** மகிழ்ச்சியோடே **.......2.......** ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் **.......3.......** வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள் நாம் அல்ல, அவரே நம்மை**.......4.......**, நாம் அவர் **.......5.......** அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் **.......6.......** துதியோடும், அவர் **.......7.......** புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் **.......8.......**, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய **.......9.......** என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் **.......10........**”

**விடைகள்:**

ஆரவாரம் / பாடுங்கள்
கர்த்தருக்கு / நம்முடைய
முன்பாக / நோக்கி
உண்டாக்கினார் / படைத்தார்
ஜனங்களும் / பிள்ளைகள்
வாசல்களில் / கதவுகள்
பிரகாரங்களில் / சபை
ஸ்தோத்திரியுங்கள் / துதித்து
கிருபை / கிருனை
உள்ளது / நீடிக்கிறது

செவ்வாய்
25

# பரிசுத்த ஆவியானவர் உங்களை நடத்துகிறார்

## யோவான் 16:13

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்...



பிள்ளைகளுக்கான தியானப் பகுதிகளை பிற மொழிகளில் பெற ஸ்கேன் செய்யுங்கள்!

தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவர் என்னும் ஒரு அற்புதமான உதவியாளரைத் தந்திருக்கிறார். அவர் தேவனுடைய வார்த்தையை நாம் புரிந்துகொள்ள நமக்கு உதவுவதால், பைபிள் அவரைச் சத்திய ஆவி என்று அழைக்கிறது.

நீங்கள் அவருக்குச் செவிசாய்க்கும்போது, அவர் உங்களைச் சரியானதைச் செய்ய நடத்துகிறார் மற்றும் தவறான முடிவுகளைத் தவிர்க்க உங்களுக்கு உதவுகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவன் பைபிளில் சொல்லியிருப்பவைகளை உங்களுக்கு நினைவூட்டி, அதன்படி வாழ உங்களுக்கு உதவுகிறார். பரிசுத்த ஆவியானவர் எப்போதும் உங்களுடனே இருப்பதால் நீங்கள் ஒருபோதும் தனிமையில் இருப்பதில்லை.

நீங்கள் அவருக்குச் செவிசாய்த்து, அவருடைய வழிநடத்துதலைப் பின்பற்றும்போது, ஒவ்வொரு நாளும் தொடர்ந்து சத்தியத்திலே நடப்பீர்கள்.

**வேத வாசிப்பு: யோவான் 15:26**

**இதை சொல்லுங்கள்**

பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வாழ்கிறார் மற்றும் என்னைச் சத்தியத்திற்குள் நடத்துகிறார். நான் அவருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து, ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையின்படி நடக்கிறேன். அல்லேலூயா!

புதன்

# 26

# வார்த்தையின்படி வாழுங்கள்

## 2 கொரிந்தியர் 4:2

வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.



தேவன் தம்முடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் காணப்பட வேண்டும் என்று விரும்புகிறார். சத்தியத்தை வெளிப்படுத்துவது என்று பைபிள் கூறுகிறது, அதாவது நீங்கள் வாழும் விதத்தில் தேவனுடைய சத்தியத்தைக் காண்பிப்பதாகும். இது சரியான காரியங்களைச் சொல்வது மட்டுமல்ல; ஒவ்வொரு நாளும் வார்த்தையின்படி வாழ்வதாகும்.

நீங்கள் அன்பாகப் பேசும்போது, அன்பைக் காட்டும்போது, மற்றவர்களை மன்னிக்கும்போது, பைபிள் சொல்வதன்படி செயல்படும்போது, நீங்கள் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறீர்கள். உங்கள் வாழ்க்கை மனிதர்கள் வாசிக்கக்கூடிய ஒரு கடிதத்தைப் போல மாறி, அவர்களுக்கு தேவனுடைய நன்மையைக் காட்டுகிறது.

கிறிஸ்தவம் என்பது இதுவே—வார்த்தையில் வாழ்வது மற்றும் நீங்கள் செல்லும் இடமெல்லாம் அது உங்கள் வழியாய் பிரகாசிக்க அனுமதிப்பதாகும்.

பிள்ளைகளுக்கான தியானப் பகுதிகளை பிற மொழிகளில் பெற ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: யாக்கோபு 1:22**

### ஜெபம் செய்வோம்

அன்புள்ள பிதாவே, எனக்குள் வாழும் உம்முடைய வார்த்தைக்காக உமக்கு நன்றி. என் வாழ்க்கை நான் செல்லும் இடமெல்லாம் உம்முடைய சத்தியத்தையும், அன்பையும், நன்மையையும் காட்டுகிறது, இயேசுவின் நாமத்தில். ஆமென்.

வியாழன்
27

# வார்த்தையினால் பிறந்தவர்கள்

## 1 பேதுரு 1:23

அழிவுள்ள வித்தினாலே அல்ல,
என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான
தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே
மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.



நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டபோது, ஒரு அற்புதமான காரியம் நடந்தது. நீங்கள் தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் பிறந்தீர்கள்.

இதன் பொருள் தேவனுடைய ஜீவனும் வார்த்தையும் உங்களுக்குள் இருக்கிறது. நீங்கள் வார்த்தையினால் பிறந்திருப்பதால், தேவனுடைய பிள்ளையாக வாழவும், அவருடைய நன்மையை மற்றவர்களுக்குக் காட்டவும் முடியும். இயேசு இந்த பூமியில் இருந்தபோது வார்த்தையின்படி வாழ்ந்தது போல, நீங்களும் உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களின் மூலம் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறீர்கள்.

ஒவ்வொரு நாளும், நீங்கள் பேசுகிறவைகளையும் செய்கிறவைகளையும் தேவனுடைய வார்த்தை வழிநடத்த அனுமதிக்கலாம். நினைவில் வையுங்கள், நீங்கள் வார்த்தையினால் பிறந்தவர்கள், உங்கள் வாழ்க்கை தேவனுடைய சத்தியத்தினாலும் ஆசீர்வாதத்தினாலும் பிரகாசிக்கிறது.

பிள்ளைகளுக்கான தியானப் பகுதிகளை பிற மொழிகளில் பெற ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: யாக்கோபு 1:18**

**இதை சொல்லுங்கள்**

நான் தேவனுடைய வார்த்தையினால் பிறந்தவன். அவருடைய வார்த்தை எனக்குள் வாழ்கிறது, என் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் அவருடைய நன்மையைக் காட்டுகிறது. அல்லேலூயா!

வெள்ளி

28

# நீங்கள் ஒரு புதிய சிருஷ்டி

2 கொரிந்தியர் 5:17

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.



நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட கணமே, ஒரு அற்புதமான காரியம் நடந்தது—நீங்கள் மறுபடியும் பிறந்தீர்கள். இதன் பொருள் நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாக மாறினீர்கள். தேவன் தம்முடைய ஆவியினாலே உங்களுக்கு முற்றிலும் புதியதொரு வாழ்க்கையைத் தந்திருக்கிறார். உங்கள் வாழ்க்கை இப்போது பரலோகத்திலிருந்து வந்த கர்த்தராகிய இயேசுவிடமிருந்து வருகிறது.

நீங்கள் வெளிப்புறமாகப் பார்ப்பதற்கு அதேபோல் தெரிந்தாலும், உங்களுக்குள் ஒரு அற்புதமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் இப்போது தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவருடைய ஜீவனை உங்களுக்குள் சுமக்கிறீர்கள். இதன் காரணமாக, நீங்கள் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் வெற்றியோடு வாழ முடியும். நீங்கள் யார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள்—தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் பிரகாசிக்கும் ஒரு புதிய சிருஷ்டி.

**வேத வாசிப்பு: கலாத்தியர் 6:15**

**நான் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டி. தேவனுடைய ஜீவன் எனக்குள் இருக்கிறது, நான் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி, வெற்றி மற்றும் பலத்தோடு வாழ்கிறேன். அல்லேலூயா!**

**இதை சொல்லுங்கள்**

சனி

29

# நீங்கள் தேவனுடைய ஒளியைப் பிரகாசிக்கிறீர்கள்

## மத்தேயு 5:14

நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.



தேவனுடைய பிள்ளையாக, அவருடைய ஜீவன் உங்களுக்குள் ஒரு பிரகாசமான ஒளியைப் போல ஒளிர்கிறது. நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று பைபிள் கூறுகிறது.

இதன் பொருள் உங்கள் வாழ்க்கை மற்றவர்கள் தேவனுடைய நன்மையைக் காண உதவ முடியும் என்பதாகும். நீங்கள் அன்பாகப் பேசும்போது, அன்பைக் காட்டும்போது, தேவனுடைய வார்த்தை சொல்வதன்படி செய்யும்போது, நீங்கள் அவருடைய ஒளியைப் பிரகாசிக்கிறீர்கள். ஒரு விளக்கு இருண்ட அறையை பிரகாசமாக்குவது போல, உங்கள் வாழ்க்கை உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பிரகாசமாக்க முடியும்.

நீங்கள் செல்லும் இடமெல்லாம்—வீட்டில், பள்ளியில் அல்லது நண்பர்களுடன் இருக்கும்போது—தேவனுடைய ஒளி உங்கள் வழியாய் பிரகாசிக்க அனுமதிக்கலாம். நினைவில் வையுங்கள், தேவனுடைய ஒளி உங்களுக்குள் இருக்கிறது, அது உங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கிறது.

பிள்ளைகளுக்கான தியானப் பகுதிகளை பிற மொழிகளில் பெற ஸ்கேன் செய்யுங்கள்!

### வேத வாசிப்பு: 1 யோவான் 4:17

## ஜெபம் செய்வோம்

அன்புள்ள கிருபையுள்ள பிதாவே, என்னை உம்முடைய ஒளியாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. என் வாழ்க்கை நான் செல்லும் இடமெல்லாம் உம்முடைய அன்பினாலும் நன்மையினாலும் பிரகாசிக்கிறது, இயேசுவின் நாமத்தில். ஆமென்.

ஞாயிறு
30

# பரிசுத்த ஆவியானவர் உங்களைத் தைரியமுள்ளவராக்குகிறார்

## எபேசியர் 5:18

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிமொள்ளாமல், ஆவியினால் நிறைந்து...



பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளுக்குத் தைரியத்தைத் தருகிறார். பேதுரு பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, அவர் பயந்து, தனக்கு இயேசுவைத் தெரியாது என்று கூடச் சொன்னார் (மத்தேயு 26:69–75).

ஆனால் அவர் பரிசுத்த ஆவியினால் நிறைந்த பிறகு, ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. பேதுரு தைரியமுள்ளவனாகி, அநேக மக்களுக்கு முன்பாக இயேசுவைப் பற்றிப் பேசினார். அதே பரிசுத்த ஆவியானவர் தான் இன்று உங்களுக்குள்ளும் வாழ்கிறார். நீங்கள் மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்ல விரும்பும்போது தைரியமாக இருக்க அவர் உங்களுக்கு உதவுகிறார்.

ஒருவேளை நீங்கள் ஒரு நண்பரைச் சபைக்கு அழைக்க விரும்பலாம் அல்லது பள்ளியில் தேவனைப் பற்றிப் பேச விரும்பலாம். பரிசுத்த ஆவியானவர் நீங்கள் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் பேச உங்களுக்கு உதவுகிறார். அவர் உங்களுக்குள் இருப்பதால், நீங்கள் எப்போதும் தைரியமாக இருக்க முடியும்.

### வேத வாசிப்பு: 2 தீமோத்தேயு 1:7

**ஜெபம் செய்வோம்**

அன்பான பரம பிதாவே, எனக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி. நான் செல்லும் இடமெல்லாம் இயேசுவின் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள அவர் என்னைத் தைரியமும் மகிழ்ச்சியும் உள்ளவராக்குகிறார், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

திங்கள்

31

# ஆவியினால் நிறைந்திருங்கள்

## அப்போஸ்தலர் 4:31

அவர்கள் ஜெபம்பண்ணினபோது...
அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால்
நிரப்பப்பட்டு...



தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும்போதும், ஆவிக்குரியப்பாடல்களைப் பாடும்போதும், தேவனுக்கு நன்றி செலுத்தும்போதும் உங்கள் ஆவி பலமடைகிறது.
அந்நிய பாஷைகளில் ஜெபிப்பது உங்களை பக்திவிருத்தியடையச் செய்யும் என்று பைபிள் கூறுகிறது (யூதா 1:20). அது நீங்கள் தைரியமும் மகிழ்ச்சியும் உள்ளவர்களாக மாற உதவுகிறது. ஆரோக்கியமான உணவு உங்கள் சரீரத்தைப் பலப்படுத்துவது போல, ஜெபத்திலும் தேவனை ஆராதிப்பதிலும் நேரத்தைச் செலவிடுவது உங்கள் ஆவியைப் பலப்படுத்துகிறது.
இதை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். வீட்டில், சபையில் அல்லது அமைதியாக ஜெபிக்கும்போது கூட இதைச் செய்யலாம். நீங்கள் தொடர்ந்து இவற்றைச் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு நாளும் உங்கள் இருதயத்தைத் தைரியத்தினாலும், விசுவாசத்தினாலும், மகிழ்ச்சியினாலும் நிரப்புவார்.

**வேத வாசிப்பு: யூதா 1:20**

**இதை சொல்லுங்கள்**

**பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வாழ்கிறார். நான் ஜெபித்து, பாடி, நன்றி செலுத்துகிறேன்; என் ஆவி பலமுள்ளதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது. அல்லேலூயா!**

# நான் யார்?



**கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குட்டிக் கதையையும் கவனமாக வாசியுங்கள். அவை ஒவ்வொன்றும் ஒரு பைபிள் பாத்திரத்தை விவரிக்கின்றன. உங்களுக்கு உதவக் கொடுக்கப்பட்டுள்ள வேதப் பகுதி குறிப்பைப் பயன்படுத்துங்கள். கோடிட்ட இடத்தில் அவர்களின் பெயரை எழுதுங்கள்.**

1. நான் இஸ்ரவேலின் வல்லமையுள்ள ஒரு ராஜாவிற்கு ஆயுததாரியாய் இருந்தேன். நான் ராஜாவாவதற்கு முன்பாக என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்தேன். நான் ஒரு பெரிய ராட்சதனையும் தோற்கடித்தேன். நான் யார்? ..................... குறிப்பு: 1 சாமுவேல் 16:16-23; 17:45-50.

2. நான் மிகவும் பொல்லாத ஒரு மனுஷனாய் இருந்தேன், ஆனால் கர்த்தர் எனக்குத் தரிசனமானார்; என் வாழ்க்கை மாறியது, நான் ஒரு நல்ல மனுஷனாய் மாறினேன். நான் புறஜாதிகளுக்கு நற்செய்தியை மிக அதிகமாகப் பிரசங்கித்தேன். என்னைப்போலவே கூடாரங்களைச் செய்த நண்பர்களும் எனக்கு இருந்தார்கள். நான் யார்? .................... குறிப்பு: அப்போஸ்தலர் 9:1–15; 18:1–3.

3. என் குடும்பமும், மிருகங்களும், நானும் பெருவெள்ளத்திலிருந்து தப்பிக்கும்படி ஒரு பெரிய பேழையைச் செய்யுமாறு தேவன் எனக்குச் சொன்னார். மழை நின்று, வெள்ளம் வற்றியபோது, நான் ஒரு திராட்சைத்தோட்டத்தை உண்டாக்கினேன். நான் யார்? .................... குறிப்பு: ஆதியாகமம் 6:8–22; 9:20-21.

4. வியாபாரிகள் என்னை எகிப்திற்கு கொண்டுசென்றார்கள். நான் போத்திபாரிடம் வேலை செய்தேன், அவருக்கு என்னை மிகவும் பிடித்திருந்தது; ஆனால் ஒரு நாள், என் மேல் பழி சுமத்தப்பட்டு, நான் சிறையிலடைக்கப்பட்டேன். இருப்பினும், சில வருடங்களுக்குப் பிறகு, நான் எகிப்து தேசம் முழுவதற்கும் அதிபதியானேன்! நான் யார்? .................... குறிப்பு: ஆதியாகமம் 37:28; 39:20; 41:38–44.

5. நான் ஒரு யூத குலத்தவள். நான் அரசியாகத் தெரிந்தெடுக்கப்பட்டேன். என் ஜனங்கள் அழிந்துபோகாதபடி அவர்களைக் காப்பாற்றவும் நான் உதவினேன். நான் யார்? .................... குறிப்பு: எஸ்தர் 2:16-23; 4–8.

# குறிப்புகள்

## சுவிசேஷம் அறிவிப்பதைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியவை - பகுதி 2

கடந்த பதிப்பில் தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொண்டதை நீங்கள் மகிழ்ச்சியோடு அனுபவித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். "நீங்கள் அறிய வேண்டியவை" என்ற இந்த பதிப்பில், சுவிசேஷம் அறிவிப்பதைப் பற்றி நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இது மகிழ்ச்சியானதாகவும், சுவாரசியமானதாகவும் மற்றும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கும். சுவிசேஷம் அறிவிப்பதைப் பற்றியும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதில் உங்களுக்குள்ள பங்கைப் பற்றியும் நீங்கள் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்வீர்கள். வாருங்கள், ஆரம்பிக்கலாம்!

**சுவிசேஷம் அறிவிப்பது உங்கள் பொறுப்பு — மத்தேயு 28:19-20; மாற்கு 16:15; 1 தீமோத்தேயு 2:4**

நெடுங்காலமாக, அநேக மக்கள் சுவிசேஷம் அறிவிப்பதைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் இது போதகர்கள், சுவிசேஷகர்கள் அல்லது சபையில் அதிக ஓய்வு நேரம் உள்ளவர்களுக்கானது என்று மட்டுமே நினைக்கிறார்கள்.

ஆனால் அது உண்மையல்ல. மக்கள் ஆத்தும ஆதாயக்காரர்களாக தேவன் தங்களுக்கு வைத்திருக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்கவிடாமல் தடுப்பதற்குப் பிசாசு பயன்படுத்தும் ஒரு தந்திரம் இதுவாகும். 2 கொரிந்தியர் 5:17-18 ஆகிய வசனங்களில் நாம் பார்த்தபடி, சுவிசேஷம் அறிவிப்பது, அதாவது மனிதர்கள் தேவனிடம் திரும்பி வர உதவுவது என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்குரியதாகும். நீங்கள் இரட்சிக்கப்பட்ட உடனே, மற்றவர்களும் இரட்சிக்கப்பட நீங்கள் உதவ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த ஆசீர்வாதத்தை நீங்கள் உங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளக் கூடாது! உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது.

**இந்த ஊழியத்திற்காக தேவன் உங்களைத்**

# குறிப்புகள்

**<u>தகுதிப்படுத்துகிறார் — எபேசியர் 4:11-12; அப்போஸ்தலர் 1:8</u>**

அப்போஸ்தலர் 1:8 மற்றும் எபேசியர் 4:11-13 ஆகிய பகுதிகளில், நாம் இரண்டு மிக முக்கியமான வேதப் பகுதிகளைக் காண்கிறோம். மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்வதற்கும், சிறந்த ஆத்தும ஆதாயக்காரர்களாக இருப்பதற்கும் தேவையான எல்லாவற்றையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார் என்பதை அவை நமக்குக் காட்டுகின்றன.

அப்போஸ்தலர் 1:8 "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."

எபேசியர் 4:11-12 " மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,.... அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்."

**<u>ஆத்தும ஆதாயக்காரரின் மேன்மை — அப்போஸ்தலர் 1:8</u>**

நீங்கள் மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல்லத் தொடங்கி, அவர்கள் தேவனை அறிந்துகொள்ள உதவும்போது, சாத்தான் உங்களைத் தடுக்க அல்லது உங்கள் வேகத்தைக் குறைக்க முயலலாம். பைபிளில் இயேசு நம்மைப் பற்றி எச்சரித்திருக்கிறார் (லூக்கா 21:34). ஆனால், ஆத்தும ஆதாயத்தில் நீங்கள் எப்போதும் பலமுள்ளவர்களாகவும், மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், வெற்றியுள்ளவர்களாகவும் இருப்பதற்கான உங்கள் ரகசியம் இதுவே—பரிசுத்த ஆவியானவர். முதலாவது, நீங்கள் அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்பு, ஒவ்வொரு நாளும் அவராலே தொடர்ந்து நிறைந்து கொண்டே இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் 1:8-இல், இயேசு தம்முடைய சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் வரை காத்திருக்குமாறு கூறினார். அவர்களுக்கு அவர் தேவைப்பட்டார் என்றால், உங்களுக்கும் அவர் தேவை.

# பதில்கள்

## பக்கம் 32

# வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்

**பகுதி 1**

"சிறு **பிள்ளைகள்** என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் **தடை** பண்ணாதிருங்கள்; தேவனுடைய **ராஜ்யம்** அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை **ஏற்றுக்** கொள்ளாவிட்டால், அவன் அதில் **பிரவேசிப்பதில்லையென்று,** மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை **ஆசீர்வதித்தார்**." *(குறிப்பு : மாற்கு 10:14-16)*

**பகுதி 2**

"நீங்கள் ஒன்றுக்குங் **கவலைப்படாமல்**, எல்லாவற்றையுங்குறித்து உங்கள் **விண்ணப்பங்களை** ஸ்தோத்திரத்தோடே கூடிய **ஜெபத்தினாலும்** வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்; அப்பொழுது எல்லாப் புத்திக்கும் **மேலான** தேவ **சமாதானம்** உங்கள் **இருதயங்களையும்** உங்கள் **சிந்தைகளையும்** கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் **காவல்** காத்துக்கொள்ளும்." *(குறிப்பு: பிலிப்பியர் 4:6-7)*

# பதில்கள்

## பக்கம் 33

# **கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்**

“பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே **கர்த்தருக்கு** ஆராதனை செய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிக்கு **முன்பாக** வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை **உண்டாக்கினார்**; நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம். அவர் **வாசல்களில்** துதியோடும், அவர் **பிரகாரங்களில்** புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் **துதித்து**, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய **கிருபை** என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறைதலைமுறைக்கும் **உள்ளது.”**

**விடைகள்:**

பாடுங்கள்
கர்த்தருக்கு
முன்பாக
உண்டாக்கினார்
ஜனங்களும்
வாசல்களில்
பிரகாரங்களில்
துதித்து
கிருபை
உள்ளது

# பதில்கள்

## பக்கம் 41

## நான் யார்?

1. **தாவீது** (வாசியுங்கள்: 1 சாமுவேல் 16:16-23, 17:45-50)

2. **அப்போஸ்தலனாகிய பவுல்** (வாசியுங்கள்: அப்போஸ்தலர் 9:1-15, 18:1-3)

3. **நோவா** (வாசியுங்கள்: ஆதியாகமம் 6:8-22, 9:20-21)

4. **யோசேப்பு** (வாசியுங்கள்: ஆதியாகமம் 37:28; 39:20; 41:38-44)

5. **எஸ்தர்** (வாசியுங்கள்: எஸ்தர் 2:16-23, 4-8)


VANISH
A RAPTURE STORY
IN A TWINKLE OF AN EYE, EVERYTHING CHANGES
NOW
AVAILABLE
THE ANIMATION MOVIE VANISH SHARES A PROFOUND STORY OF THE END TIME, PREPARING THE HEARTS OF CHILDREN FOR ETERNITY. BORN FROM A VISION TO REACH CHILDREN EVERYWHERE, VANISH CARRIES A MESSAGE OF HOPE AND READINESS FOR THE RETURN OF JESUS. ITS MISSION IS CLEAR—TO TOUCH ONE BILLION YOUNG LIVES ACROSS THE WORLD.
FOR MORE INFORMATION ON SPONSORSHIP KINDLY VISIT
www.thevanishmovie.org



# இரட்சிப்பின் ஜெபம்

இதை சொல்லுங்கள்: “அன்புள்ள தேவனே, இயேசு கிறிஸ்துவை, ஜீவனுள்ள தேவனின் குமாரனை, என் முழு இருதயத்துடன் நம்புகிறேன். அவர் எனக்காக மரித்தார் என்றும் தேவன் அவரை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தார் என்றும் நம்புகிறேன். இன்று முதல் இயேசு கிறிஸ்து என் வாழ்க்கையின் தேவன் என்று நான் என் வாயால் அறிக்கை செய்கிறேன். அவர் மூலமாகவும் அவரின் நாமத்தினாலும் எனக்கு நித்திய ஜீவனுண்டு. நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன். தேவனே, என் ஆத்துமா இரட்சிக்கப்பட்டதற்காக, நன்றி ! நான் இப்போழுது தேவனின் பிள்ளை. அல்லேலூயா!”

நல் வாழ்த்துகள்! இப்பொழுது நீங்கள் தேவனின் பிள்ளை!

ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசம்

## எழுத்தாளர் பற்றி

பாஸ்டர் கிறிஸ் ஓயாக்கிலோமே, லவ்வேர்ல்ட் இன்க் தலைவர், இது ஒரு ஆற்றல்மிக்க, பன்முக, உலகளாவிய அமைச்சகம். அவர் பரமசத்தியத்தில் பரவசம் என்ற உலகத்தின் முதன்மையான தின தியானம் மற்றும் 30க்கு மேலான புத்தகங்களின் நூலாசிரியராவார். தேவ வார்த்தைக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த தேவ ஊழியரின் செய்தி பலருக்கும், பிள்ளைகளுக்கும் தெய்வீக வாழ்க்கையின் எதார்த்தத்தை அவர்களின் இருதயத்திற்கு  கொண்டு வந்துள்ளது.

“அட்மாஸ்பியர் போர் மிரக்கிள்ஸ்," "உங்கள் லவ் வேர்ல்ட் ஸ்பெஷல்ஸ்" மற்றும் "சுகமளிக்கும் நீரோடைகளின் நேரிலை சுகத்தின் ஆராதனை" போன்ற அவரது தொலைக்காட்சி ஒளிபரப்புகளால் பல லட்சகோடி மக்கள் தாக்கப்பட்டார்கள். அவரது தொலைக்காட்சி ஊழியத்தின் காட்சிப்பரப்பு லவ்வேர்ல்ட் செயற்கைக்கோள் தொலைக்காட்சி நெட்வொர்க்குகளுடன் உலகம் முழுவதும் பரவியுள்ளது. உலகளாவிய பார்வையாளர்களுக்கு தரமான கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை வழங்குகிறது.

உலகப் புகழ்பெற்ற சுகமளிக்கும் பள்ளியில், அவர் இயேசு கிறிஸ்துவின் குணப்படுத்தும் செயல்களை வெளிப்படுத்துகிறார் மற்றும் ஆவியின் வரங்களின் செயல்களால் அநேகர் சுகம் பெற உதவி செய்கிறார்.

## இந்த புத்தகத்தைப் பற்றியவை

தேவ வார்த்தையை மகிழ்ச்சியுடன் படிக்க ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசம் உதவுகிறது.

ஒவ்வொரு நாளுக்கான தியானமும் தேவ வார்த்தையை உற்சாகமாக வழங்குகிறது மேலும் பிள்ளைகளை தேவ  வார்த்தையை கட்டமைக்கப்பட்ட வடிவத்தில் படிக்கும் ஒழுக்க முறையில் வளர்க்க உதவுகிறது.
ஒவ்வொரு தியானத்தில் அவர்கள் கற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்த ஒரு ஜெபம் அல்லது அறிக்கை இருக்கும்.

வேதத்தின் உண்மைகள், குறுக்கெழுத்து புதிர்கள், வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் பல சுவாரசியமான அம்சங்களுடன், பிள்ளைகளின் பரமசத்தியத்தில் பரவசம் அவரகளை தேவ வார்த்தையிலும் அவர்களின் ஆவியை வளர்க்க உதவும் முழுமையான செய்முறையாகும்!

Say Yes! to Kids Campaign
LoveWorld Publishing
Kiddies LoveWorld
ISSN 1596-6984
9 771596 698001